வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி 01.09.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் ஆகியோர், இன்று சீனாவில் சந்தித்து, பல்வேறு துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 86 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்றத்திலும், மற்றும், சட்டமன்றங்களிலும், உறுப்பினர்கள், கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு வலியுறுத்தி உள்ளார்.

உலக உயிரி தொழில்நுட்ப சக்தியாக மேம்படும் வல்லமை, இந்தியாவிற்கு இருப்பதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

---

மோடி-புடின் 1 (7)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் ஆகியோர், இன்று சீனாவின் டியான்ஜின் நகரில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டிற்கு இடையே, இருதரப்பு ரீதியில் சந்தித்து, நிதி, பொருளாதாரம், எரிசக்தி உள்ளிட்ட துறைகளில், ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர். இத்துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு

தொடர்ச்சியான முறையில் வலுவாகி வருவது குறித்து, இருதலைவர்களும் நம்பிக்கை வெளியிட்டனர். இந்த சந்திப்பு குறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

மோடி-புடின் 2 (14)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் ஆகியோர், பல்வேறு பிராந்திய பிரச்சனைகள், மற்றும், உக்ரைன் உள்ளிட்ட உலகப் பிரச்சனைகள் குறித்தும், விவாதித்தனர். உக்ரைன் பிரச்சனைக்கு, நிலையான முறையில் அமைதித் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

இந்தியாவிற்கும், ரஷ்யாவிற்கும் இடையிலான சிறப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தத் தேவையான ஆதரவை வழங்க, இரு தலைவர்களும் உறுதி அளித்தனர். இந்தியாவும், ரஷ்யாவும், கடினமான கால கட்டங்களில் கூட, தோளோடு தோள் நின்று செயல்பட்டு வந்திருப்பதை பிரதமர் திரு. நரேந்திர மோடி சுட்டிக் காட்டி, உலகின் ஒட்டுமொத்த அமைதி, மற்றும் ஸ்திரத் தன்மைக்கு, இந்தோ-ரஷ்ய உறவுகள் மிக முக்கியம் என்றார்.

ரஷ்ய அதிபர் திரு. புடினை, இவ்வாண்டின் பிற்பகுதியில், 23ஆவது வருடாந்திர உச்சி மாநாட்டின் போது இந்தியாவில் சந்திக்க தாம் ஆர்வம் கொண்டுள்ளதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். தொடர்ந்து, அவர் தமது சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு, மீண்டும் புதுடெல்லிக்கு புறப்பட்டுள்ளார்.

-------------------------

மோடி பூகம்பம் (11)

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பெரும் எண்ணிக்கையில் உயிர்கள் பலியானது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். இயன்ற அனைத்து மனிதாபிமான உதவிகள், மற்றும் நிவாரண உதவிகளை ஆப்கானிஸ்தானுக்கு வழங்க,

இந்தியா தயார் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். நில அதிர்வில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்காக தாம் பிரார்த்தனை செய்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணம் பெற வேண்டுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில், ஜலாலாபாத் அருகே, குணார் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 600க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். சுமார் ஆயிரத்து 500 பேர் காயமடைந்தனர். ரிக்டர் அளவுகோலில், 6 புள்ளிகளாக, இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளது.

--------------------------

ஜிஎஸ்டி வசூல் (6)

கடந்த ஆகஸ்ட் மாதம் ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 86 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 6.5 சதவிகித வளர்ச்சியாகும். மொத்த ஜிஎஸ்டி வசூலில், உள்நாட்டு வருவாய், 1 லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாயாகவும், இறக்குமதி வருவாய், 49 ஆயிரம் கோடி ரூபாயாகவும் பதிவாகி இருப்பதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------------------

*சிந்தியா* (19)

புதுடெல்லி யஷோபூமி மாநாட்டு கூடத்தில், அடுத்த மாதம் 8 முதல், 11ஆம் தேதி வரை நடைபெற உள்ள, 9ஆவது இண்டியா மொபைல் காங்கிரஸ் கண்காட்சியின்போது, பார்வையாளர்களுக்கு உதவும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ள மொபைல் செயலியை, மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா இன்று வெளியிட்டார். தொலை தொடர்புத் துறையின் வளர்ச்சியினால், உலக அளவில் தகவல் பரிமாற்றம் மட்டுமின்றி, வர்த்தகம், வாழ்வாதாரம், மற்றும், மக்களுக்கு இடையிலான உணர்வுப்பூர்வ தொடர்புகளிலும் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். விவசாயிகள், மாணவர்கள், மற்றும், சிறு, குறு நிறுவனங்கள், தகவல் தொடர்பு வசதிகளின் வளர்ச்சியினால் எப்படி எல்லாம் பயன்பெறுகிறார்கள் என்பது குறித்து மாநாட்டில்

விவாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். தொலை தொடர்புத் துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை, கொள்கை வகுப்பாளர்கள், மற்றும், புதுமைப் படைப்பாளர்களுடன் ஒருங்கிணைக்கும் மேடையாக இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாடு அமையும் என்றும் அமைச்சர் கூறினார். 9ஆவது இண்டியா மொபைல் காங்கிரஸ் கண்காட்சியில், அடுத்தத் தலைமுறை 6ஜி தகவல் தொடர்பு வசதிகள், செயற்கை நுண்ணறிவ தொழில்நுட்பம், மற்றும், பசுமை தொழில்நுட்பங்கள் குறித்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட காட்சிப் பொருட்கள் இடம்பெற உள்ளன.

--------------------------

*ரிஜிஜூ* (17)

நாடாளுமன்ற, மற்றும், சட்டமன்ற உறுப்பினர்கள், அவையின் கண்ணியத்தை காக்கும் வகையில் நடந்து கொள்ளுதல் அவசியம் என்று, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். டெல்லி சட்டமன்றத்தின் முதலாவது சபாநாயகர் சர்த்திலால் கோயலின் 98ஆம் ஆண்டு பிறந்த நாளை ஒட்டி, இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், தற்போது பல அரசியல்வாதிகள், அரசியல் ஆதாயத்திற்காக மோசமான கருத்துக்களை வெளியிடுவதாக கூறினார். நாடாளுமன்றமும், மாநில சட்டமன்றங்களும் முறையாக செயல்பட்டால்தான், ஜனநாயகம் மீதான மக்களின் நம்பிக்கையை காக்க முடியும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, மூத்த பிஜேபி தலைவர் திரு. ரவிசங்கர் பிரசாத் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஓட்டு திருட்டு மீதான பிரமாணப் பத்திரங்கள் மீது, திரு. ராகுல் காந்தி மௌனம் காப்பது ஏன் என வினவினார். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, இந்தியப் படைகள் மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டுவதற்கு பதிலாக, திரு. ராகுல் காந்தி மக்களவையில், பாதுகாப்புப் படைகளின் வீரத்தை கேள்விக்கு உட்படுத்தியதாக அவர் குற்றம் சாட்டினார்.

--------------------------

ஜிதேந்திரா (13)

இந்தியாவில் உயிரி தொழில்நுட்பம், எல்லாத் துறைகளிலும் எட்டி இருப்பதாகவும், உலக உயிரி தொழில்நுட்ப சக்தியாக மேம்படும் வல்லமை, இந்தியாவிற்கு உண்டு என்பதற்கு இதுவே சான்றாகும் என்றும் மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். பொருளாதாரம், சுற்றுச் சூழல், மற்றும், வேலை வாய்ப்புக்கான உயிரி தொழில்நுட்பம் என்னும் அரசுக் கொள்கையின் அமலாக்கம் தொடங்கி, ஓராண்டு பூர்த்தியாவதை ஒட்டி, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர் செயல்பாட்டு உயிரி தொழில்நுட்ப வசதிகளை, அவர் தொடக்கி வைத்து பேசினார். 2014ஆம் ஆண்டில், வெறும் 10 பில்லியன் டாலராக மட்டுமே இருந்த, இந்திய உயிரிப் பொருளாதாரத்தின் மதிப்பு, 2024-ல், 165 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாகவும், 2030ஆம் ஆண்டிற்குள், இதை 300 பில்லியன் டாலராக உயர்த்தும் இலக்குடன், அரசு செயல்பட்டு வருவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

-------------------------

பட்டுவாடா வங்கி 1 (6)

2018ஆம் ஆண்டு, இதே நாளில் தொடக்கப் பட்ட India post பட்டுவாடா வங்கி, தனது 8 ஆண்டு சேவையில், 12 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை சேர்த்துக் கொண்டு, பலகோடி டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொண்டதுடன், வங்கி சேவைகளை, வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் வசதிகளையும், செயல்படுத்தி வருகிறது. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

பட்டுவாடா வங்கி 2 (13)

(வாய்ஸ்)

அனைவருக்கும் வங்கி வசதி வழங்குவதில், உலகின் மிகப் பெரிய முன் முயற்சிகளில் ஒன்றாகத் திகழும் India post பட்டுவாடா வங்கி, தனது சேவைகளை, நாடு முழுவதிலும் உள்ள 1 லட்சத்து 66 ஆயிரத்திற்கும்

மேற்பட்ட அஞ்சலகங்கள், 1 லட்சத்து 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால்காரர்கள், மற்றும், கிராமப்புற தபால் சேவகர்கள் மூலம், மக்களுக்கு வழங்கி வருகிறது. ஓய்வூதியம், மற்றும், பல்வேறு அரசு திட்டங்களின் பலன்களை நேரடியாக பயனாளிகளுக்கு வழங்குவதிலும், கூட்டாளி நிறுவனங்களுடன் இணைந்து, கடன் மற்றும் காப்பீடு வசதிகளை வழங்குவதிலும், India post பட்டுவாடா வங்கி, முக்கிய பங்காற்றி வருகிறது. கூடுதல் சலுகைகளுடன் கூடிய ஆரோக்கியா சேமிப்புக் கணக்கு, ஆதார் அடிப்படையிலான முக அடையாள தொழில்நுட்பம், ரூ-பே மெய்நிகர் டெபிட் அட்டை, பாரத் பில்-பே ஒருங்கிணைப்பு போன்ற வசதிகளையும் இந்த வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருவதும் குறிப்பிடத் தக்கது.

-------------------------

*பிரதான்*-NCERT (10)

நாட்டின் கல்விக் கட்டமைப்பில், டிஜிட்டல் வசதிகளை ஒருங்கிணைத்து, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை புகுத்த வேண்டியதன் அவசியத்தை, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தி உள்ளார். இன்று புதுடெல்லியில், கல்வி, ஆராய்ச்சி, மற்றும் பயிற்சிக்கான தேசிய சபையின் 65ஆவது நிறுவன நாள் விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு வலியுறுத்தினார். விழாவின் போது, பிரதமரின் இ-வித்யா மொபைல் செயலி, பள்ளிக் கல்விக்கான 2ஆம் கட்ட தீக்ஷா கட்டமைப்பு உள்ளிட்ட வசதிகளை, அவர் தொடக்கி வைத்தார். இந்திய கல்வித் துறையின் முன்னேற்றத்தில், NC-ERT ஆற்றி வரும் முக்கிய பங்களிப்பை அமைச்சர் பாராட்டினார்.

-------------------------

*மகளிர் ஆணையம்* (10)

தேசிய மகளிர் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள, மகளிர் பாதுகாப்பு குறியீடு பற்றிய வருடாந்திர அறிக்கையில், நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பு அதிகம் உள்ள முதல் நகரமாக, நாகாலாந்து தலைநகர் கொஹிமா, தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. ஆந்திர மாநிலம்

விசாகப்பட்டினம், ஒடிசா தலைநகர் புவனேஷ்வர் ஆகிய நகரங்கள், 2, மற்றும் 3ஆம் இடம் பெற்றுள்ளன. பொதுவாக இப்பட்டியலில், வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த நகரங்கள் முன்னணி இடங்ளை பிடித்துள்ளன. 31 நகரங்களில், பெண்களின் பாதுகாப்பிற்கு ஏற்ற உள்கட்டமைப்பு வசதிகள், பணியிடப் பாதுகாப்பு, அதிகாரிகளின் பொறுப்புணர்வு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து, தேசிய மகளிர் ஆணையம் இப்பட்டியலை தயாரித்துள்ளது.

-------------------------

*புதுவை கணினி (8)*

புதுச்சேரியில், சுகாதாரத் துறையில் பணிபுரியும் ANM செவிலியர்கள், வீடு வீடாக சென்று, மருத்துவம் சார்ந்த விவரங்களை நிகழ் நேர அடிப்படையில் சேகரித்து பதிவேற்ற ஏதுவாக, 220 ANM செவிலியர்களுக்கு, மாநில அரசு, தலா 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கைக் கணினி வழங்கி உள்ளது. சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கைக் கணினிகளை வழங்கினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியின் போது உடன் இருந்தனர்.

-------------------------

*வானிலை (11)*

வடக்கு வங்கக் கடலில், அடுத்த 24 மணி நேரத்தில், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் இன்றைய தினம், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வரும் 7ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்

பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, மதுரை மாவட்டம் கள்ளந்திரி, மற்றும், புதுச்சேரியில், தலா 5 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------

*கல்யாணி* (6)

மத்திய நிதியமைச்சகத்தின் செலவினத் துறையில், புதிய கணக்கியல் தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியாக, திருமதி TCA கல்யாணி இன்று பொறுப்பேற்றுள்ளார். 1991ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய சிவில் கணக்கியல் சேவை அதிகாரியான திருமதி கல்யாணி, இதுவரை, மத்திய உள்துறை அமைச்சகத்தில், முதன்மை தலைமை கணக்கியல் கட்டுப்பாட்டு அதிகாரியாக பதவி வகித்து வந்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் ஆகியோர், இன்று சீனாவில் சந்தித்து, பல்வேறு துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 86 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்றத்திலும், மற்றும், சட்டமன்றங்களிலும், உறுப்பினர்கள், கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ வலியுறுத்தி உள்ளார்.

உலக உயிரி தொழில்நுட்ப சக்தியாக மேம்படும் வல்லமை, இந்தியாவிற்கு இருப்பதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது